முழுப் பதிப்புரிமையுடையது

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA3 பரீட்சை – 2020 சனவரி

## (AA31) நிதிக் கணக்கீடும் அறிக்கையிடலும்

(Financial Accounting and Reporting)

2020-01-18
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை எழுதவும்.***

(3) ***விடைகள்*** *உமக்குத் தரப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீங்கள் ஏதாவது எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றை தெளிவாகக் குறிப்பிடுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களின்*** *நிரலில் தரப்பட்ட வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

பொதுநோக்கு நிதியறிக்கையிடலின் நோக்கம் தீர்மானங்களை மேற்கொள்வதில் தற்போதைய மற்றும் எதிர்கால சாத்தியமான நாட்டதாரர்களுக்கு பயனுள்ளதாக அறிக்கையிடும் உரிமம் பற்றிய நிதித் தகவல்களை வழங்குதலாகும். நிதித் தகவல்கள் பயனுடையதாக இருப்பதற்கு அவை தொடர்புடைய தாகவும் விசுவாசமாக பிரதிபலிப்பதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் நிதித் தகவல்களின் பயன்பாட்டினை அதிகரிப்பதற்கு நான்கு தரரீதியான குணாம்சங்கள் (qualitative characteristics) உள்ளன.

**நீங்கள் செய்யவேண்டியது:**

நிதித் தகவல்களின் பயன்பாட்டினை அதிகரிக்கும் தரரீதியான குணாம்சங்கள் இரண்டினை (02) **விபரிக்குக.**
(05 புள்ளிகள்)

### வினா 02

ஒன்றித்த அறிக்கையிடலானது (Integrated reporting) நிறுவனங்களுக்கான கூட்டிணைவு (நிறுவன) விழுமியம் மற்றும் நிலைபேறான தன்மை ஆகியவற்றை உருவாக்கும் செயன்முறை என பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நிறுவனம் மீதான கண்ணோட்டம் (overview) மற்றும் வெளிவாரிச் சூழல் ஆகியன ஒன்றித்த அறிக்கையின் ஆக்கக் கூறுகளில் ஒன்றாகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) ஒன்றித்த அறிக்கையிடலின் பிரதான குறிக்கோள்கள் இரண்டினை (02) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) நிறுவனம் மீதான கண்ணோட்டம் மற்றும் வெளிவாரிச் சூழலில் உள்ளடக்கப்படும் பிரதான பகுதிகள் மூன்றினை (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

SLFRS 15 – வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்'' என்ற நியமத்தின்படி உரிமமொன்று ஐந்து படிமுறைகளைப் பிரயோகித்து வருமானத்தை ஏற்பிசைவு செய்கின்றது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

SLFRS 15 – இன்படி வருமானத்தை ஏற்பிசைவு செய்வதற்குப் பின்பற்றப்படும் (05) படிமுறைகளைக் **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

## வினா 04

கீழ்வரும் மீதிகள் **அமீன் PLC** யின் நிதிநிலைக் கூற்றுக்களிலிருந்து பிரித்தறியப்பட்டன:

| **மார்ச் 31 இல்** | **2019 (ரூபா '000)** | **2018 (ரூபா '000)** |
|---|---|---|
| நடைமுறையல்லாச் சொத்துக்கள்: | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 58,500 | 57,500 |
| திரள் தேய்மானம் | (34,800) | (28,200) |
| **முன்கொணரற் பெறுமதி** | **23,700** | **29,300** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2019 சனவரி 01 இல் மோட்டார் வாகனமொன்று விற்பனை செய்யப்பட்டதுடன் அதன் கிரயமும் விற்பனைத் திகதியில் அதன் திரள் தேய்மானமும் முறையே ரூபா 4,500,000/- ஆகவும் ரூபா 2,800,000/- ஆகவும் காணப்பட்டன. மோட்டார் வாகன விற்பனையால் ஏற்பட்ட நட்டம் ரூபா 475,000/- ஆகும். விற்பனை செய்யப்பட்ட வாகனத்திற்குப் பிரதியீடாக 2019 மார்ச் 31 இல் கம்பனி மோட்டார் வாகனமொன்றினை ரூபா 3,000,000/- க்கு கொள்வனவு செய்தது.

(2) ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள அலுவலகத் தளபாடம் 2019 மார்ச் 31 இல் கொள்வனவு செய்யப்பட்டது.

மேற்படி தகவல்களைப் பயன்படுத்தி,

**நீங்கள் செய்யவேண்டியது:**

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு **அமீன் PLC** யின் முதலீட்டுச் செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்வுகளைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2019 மார்ச் 31, 2018 மார்ச் 31, 2017 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான **வ/ப மெடி ரெக் (தனி) கம்பனியின்** நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தறியப்பட்டன:

**முற்றடக்க வருமானக் கூற்றுக்களிலிருந்தான பிரித்தெடுப்புகள்** *(ரூபா'000)*

| **ஆண்டு முடிவு** | **2019 மார்ச் 31** | **2018 மார்ச் 31** | **2017 மார்ச் 31** |
|---|---|---|---|
| புரள்வு (விற்பனை) | 300,000 | 275,000 | 260,000 |
| விற்பனைக் கிரயம் | 179,960 | 178,425 | 169,450 |
| மொத்த இலாபம் | 120,040 | 96,575 | 90,550 |
| வட்டி மற்றும் வரிக்கு முன் இலாபம் | 43,400 | 38,300 | 41,250 |
| வரிக்கு முன் இலாபம் | 38,000 | 35,700 | 34,300 |
| வரிக்குப் பின் இலாபம் | 27,500 | 28,300 | 27,800 |

**நிதி நிலைக் கூற்றுக்களிலிருந்தான பிரித்தெடுப்புக்கள்** *(ரூபா '000)*

| **திகதியில்** | **2019 மார்ச் 31** | **2018 மார்ச் 31** | **2017 மார்ச் 31** |
|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | | |
| தொக்குகள் | 19,000 | 15,000 | 14,000 |
| வியாபார வருமதிகள் | 40,500 | 27,000 | 21,500 |
| காசும் காசுச் சமானங்களும் | 8,500 | 6,200 | 7,400 |
| | **68,000** | **48,200** | **42,900** |
| **உரிமையாண்மை:** | | | |
| குறிப்பிடு மூலதனம் | 110,000 | 110,000 | 110,000 |
| கைக்கொள் இலாபம் | 60,000 | 32,500 | 4,200 |
| | **170,000** | **142,500** | **114,200** |
| நீண்டகாலக் கடன் | 42,000 | 56,000 | 38,000 |
| **நடைமுறைப் பரிப்புக்கள்:** | | | |
| வியாபார சென்மதிகள் | 19,500 | 16,200 | 15,300 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 9,500 | 9,100 | 7,600 |
| அட்டுறு செலவுகள் | 8,500 | 6,100 | 6,800 |
| | **37,500** | **31,400** | **29,700** |

எல்லா விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டவை எனக் கொள்க.

மேற்படி தகவல்களைப் பயன்படுத்தி,

**நீங்கள் செய்யவேண்டியவை:**

கீழ்வரும் விகிதங்களைக் கணிப்பிட்டு, 2018 மார்ச் 31 மற்றும் 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுகளுக்கான **வ/ப மெடி ரெக் (தனி) கம்பனியின்** செயற்பாட்டினைப் **பகுப்பாய்வு செய்க**:

(a) மொத்த இலாப விகிதம்

(b) நிகர இலாப விகிதம்

(c) தொக்குப் புரள்வு விகிதம்

(d) கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்

(e) தொழிற்படுத்திய மூலதனம் மீதான வருவாய் (ROCE). (10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட வெஸ் (தனி) கம்பனியின்** 2019 மார்ச் 31 மற்றும் 2018 மார்ச் 31 ஆகிய திகதிகளிலான நிதிநிலைக் கூற்றுக்கள் கீழ்வருமாறு:

**வரையறுக்கப்பட்ட வெஸ் (தனி) கம்பனி**

**நிதிநிலைக் கூற்று** *(ரூ.'000)*

| மார்ச் 31 ஆந் திகதி | 2019 | 2018 |
|---|---|---|
| **சொத்துக்கள்:** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்:** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 23,820 | 22,420 |
| திரள் தேய்மானம் | (10,590) | (9,470) |
| **முன்கொணரற் பெறுமதி** | **13,230** | **12,950** |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | |
| தொக்குகள் | 320 | 470 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 1,702 | 1,270 |
| காசும் காசுச் சமானங்களும் | 398 | 210 |
| | **2,420** | **1,950** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **15,650** | **14,900** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்:** | | |
| **உரிமையாண்மை:** | | |
| குறிப்பிடு மூலதனம் | 12,200 | 12,200 |
| கைக்கொள் இலாபம் | 1,260 | 660 |
| | **13,460** | **12,860** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள்:** | | |
| நீண்டகாலக் கடன்கள் | 450 | 1,000 |
| | **450** | **1,000** |
| **நடைமுறைப் பரிப்புக்கள்:** | | |
| குறுங்காலக் கடன்கள் | 150 | 150 |
| வியாபார சென்மதிகள் | 1,470 | 540 |
| கடன் மீது செலுத்தவேண்டிய வட்டி | - | 50 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 120 | 300 |
| | **1,740** | **1,040** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **15,650** | **14,900** |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானவரிச் செலவினம் ரூபா 175,000/- ஆகும்.

(2) கிரயம் ரூபா 1,900,000/- ஆகவும் 2019 மார்ச் 31 இல் திரள் தேய்மானம் ரூபா 850,000/- ஆகவும் இருந்த எந்திரமொன்று 2019 மார்ச் 31 இல் ரூபா 2,000,000/- க்கு விற்கப்பட்டது.

(3) கம்பனி ஆண்டின்போது அதன் சாதாரண பங்குதாரர்களுக்கு இடைக்காலப் பங்கிலாபமாக ரூபா 300,000/- இனைச் செலுத்தியது.

(4) கடன்கள் மீது 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வட்டிச் செலவு ரூபா 325,000/-.

(5) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் வேறு முற்றடக்க வருமானங்கள் இருக்கவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது:**

<u>நேரில் முறையைப்</u> பயன்படுத்தி 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு **வரையறுக்கப்பட்ட வெஸ் (தனி) கம்பனியின்** காசுப் பாய்வுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 07

(A) **வரையறுக்கப்பட்ட கித்மி கம்பனியின்** நிதி முகாமையாளர் 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின்போது கீழ்வரும் சம்பவங்கள் நடைபெற்றிருப்பதைக் கண்டார்:

(1) 2018 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து **வ/ப கித்மி கம்பனி** SAP B1 எனும் புதிய கணக்கீட்டு முறைமை ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் அந்தத் திகதியில் தொக்கு மதிப்பீட்டிற்கான கணக்கீட்டுக் கொள்கை மாற்றப்பட்டது. 2018 மார்ச் 31 வரையில் கம்பனி தொக்குகளை முதல் உள்ளே – முதல் வெளியே (FIFO) அடிப்படையில் மதிப்பிட்டதுடன் அதன் பின்னர் புதிய கணக்கீட்டு முறைமையின்படி நிறையேற்றிய சராசரிக் கிரயத்தில் (WAC) தொக்குகள் மதிப்பிடப்படவுள்ளன. இந்தக் கணக்கீட்டுக் கொள்கை மாற்றம் காரணமாக 2018 மார்ச் 31 இல் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள தொக்கின் பெறுமதியைவிட தொக்குகள் ரூபா 6.7 மில்லியனால் மிகைப்படுத்தி மதிப்பிடப்பட்டிருக்கின்றன.

(2) **வ/ப கித்மி கம்பனியின்** உதவிக் கணக்காளர் 2017 டிசெம்பர் 31 இல் ரூபா 500,000/- க்கு கொள்வனவு செய்த அலுவலக உபகரணம் தொடர்பில் கடந்த நிதியாண்டில் (2017/18) பெறுமானத்தேய்வினை கணக்கிற்கொள்ளத் தவறியுள்ளார். கம்பனி அலுவலக உபகரணங்களை கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்கின்றது. அலுவலக உபகரணங்களின் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

LKAS 8 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் நியமத்திற்கு அமைவாக **வ/ப கித்மி கம்பனியின்** 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் மேற்படி இரு நிகழ்வுகளினதும் தாக்கங்களை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(B) கீழ்வரும் தகவல்களும் **வ/ப கித்மி கம்பனியின்** 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டு தொடர்புபட்டவையாகும்:

(1) வரிமதிப்பாண்டு 2017/18 இல் இறக்குமதிகள் தொடர்பில் உள்ளீட்டு வரி ரூபா 1.5 மில்லியனை அனுமதிக்க மறுத்து பெறுமதிசேர் வரிக்கு (VAT) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் மதிப்பீடொன்று அனுப்பப்பட்டிருந்தது. பின்னர், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் மேற்கொண்ட பல கலந்தாய்வுகளை அடுத்து ரூபா 1 மில்லியனுக்கு அனுமதி மறுக்கப்பட்ட இறைவரித் திணைக்களத்தின் தீர்மானம் 2019 ஏப்ரல் 02 ஆந் திகதி பெறப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் இது கவனத்திற் கொள்ளப்படவில்லை.

(2) போட்டியாளர் ஒருவர் தமது உற்பத்திப் பொருளை விளம்பரமொன்றில் இழிவுபடுத்தியதாகக் கூறி **வ/ப கித்மி கம்பனிக்கு** எதிராக ரூபா 50 மில்லியன் நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார். 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட்ட திகதியான 2019 மே 15 ஆந் திகதி வரையில் கம்பனியின் சட்ட வல்லுநர்கள் கம்பனி நட்டஈடு செலுத்த வேண்டிய நிலை ஏற்படாது என ஆலோசனை வழங்கியிருந்தனர்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

LKAS 37 – ஏற்பாடுகள், உறுமுரிமைச் சொத்துக்கள் மற்றும் உறுமுரிமைப் பரிப்புக்கள் நியமத்திற்கு அமைவாக மேற்படி நிகழ்வுகள் ஒவ்வொன்றும் 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் எவ்வாறு ஏற்பிசைவு செய்யப்படும் என **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## <u>பகுதி C</u>

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

கீழே தரப்பட்டுள்ள பரீட்சைமீதி 2019 மார்ச் 31 ஆந் திகதியில் **மெடிற்ரோ PLC** யின் கணக்கேடுகளில் இருந்து பிரித்தறியப்பட்டன:

**மெடிற்ரோ PLC**

**2019 மார்ச் 31 இல் பரீட்சைமீதி** *(ரூபா '000)*

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (900,000 சாதாரண பங்குகள்) | | 90,000 |
| கைக்கொள் இலாபம் - 2018 ஏப்ரல் 01 இல் | | 17,000 |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் :** | | |
| காணி | 55,000 | |
| கட்டடம் | 32,000 | |
| பொறி மற்றும் எந்திரம் | 14,000 | |
| மோட்டார் வாகனம் | 10,000 | |
| அலுவலக உபகரணம் | 7,200 | |
| மூலதனப் புத்துருவாகும் வேலை | 16,000 | |
| **திரள் தேய்மானம் - 2018 ஏப்ரல் 01 இல்:** | | |
| கட்டடம் | | 15,000 |
| பொறி மற்றும் எந்திரம் | | 6,000 |
| மோட்டார் வாகனம் | | 5,500 |
| அலுவலக உபகரணம் | | 3,500 |
| முற்கொடுப்பனவுகள் | 1,500 | |
| **வ/ப மெடி றிசேர்ச்** கம்பனிக்கு கொடுப்பனவு | 2,500 | |
| தொக்குகள் - 2019 மார்ச் 31 இல் | 32,500 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 41,000 | 36,850 |
| பணிக்கொடை ஏற்பாடு | | 20,500 |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 16,500 | |
| செலுத்திய வருமான வரி | 2,750 | |
| செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் - சாதாரண பங்குகள் | 9,000 | |
| விற்பனைக் கிரயம் / விற்பனை | 269,400 | 378,500 |
| நிருவாகச் செலவுகள் | 46,000 | |
| விநியோகச் செலவுகள் | 29,500 | |
| நிதிச் செலவுகள் | 500 | |
| ஐயக் கடன் ஏற்பாடு – 2018 மார்ச் 31 இல் | | 500 |
| வங்கிக் கடன் | | 12,000 |
| | **585,350** | **585,350** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2019 மார்ச் 31 இல் இருந்த தொக்குகள் கிரயத்தில் ரூபா 700,000/- கிரயமான வழக்கிழந்த தொக்குகளை உள்ளடக்கியிருந்தது. வாங்குநரின் இடத்திற்கு இந்தத் தொக்குகளைக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்துச் செலவாக ரூபா 20,000/- ஐச் செலவு செய்து வாங்குநர் ஒருவருக்கு 2019 ஏப்ரல் 05 ஆந் திகதி ரூபா 250,000/- க்கு இவை விற்பனை செய்யப்பட்டன. இது தொடர்பில் பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

(2) 2019 மார்ச் 31 இல் கம்பனி அதன் காணியை ரூபா 60 மில்லியனாக மீள்மதிப்பீடு செய்தது. இது கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(3) 2018 யூலை 01 ஆந் திகதி கம்பனி ரூபா 3,500,000/- க்கு புதிய எந்திரமொன்றைக் கொள்வனவு செய்ததுடன் இதனை கொள்வனவுக் கணக்கின் கீழ் பதிவு செய்தது. அத்துடன் எந்திர நிறுவுதல் மற்றும் சோதனைக்காக அதே திகதியில் மேலும் ரூபா 500,000/- ஐச் செலவு செய்ததுடன் அதனை நிருவாகச் செலவுகளின் கீழ் பதிவு செய்தது.

(4) ஆண்டின்போது புதிய உற்பத்திப் பொருளொன்றிற்காக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி தொடர்பில் கம்பனி ரூபா 2,500,000/- இனை **வ/ப மெடி றிசேர்ச் கம்பனிக்குச்** செலுத்தியது. இந்தத் தொகை **வ/ப மெடி றிசேர்ச்** கம்பனிக்கு கொடுப்பனவுக் கணக்கில் வரவுப்பதிவு செய்யப்பட்டது. கம்பனி புதிய பொருளுக்கான அதன் வர்த்தகத் தொழிற்பாட்டினை 2019 ஏப்ரலில் ஆரம்பித்தது.

(5) கம்பனி புதிய தொழிற்சாலைக் கட்டடத்தினை நிருமாணிப்பதற்காக 2019 சனவரி 01 இல் ஆண்டிற்கு 12 % வட்டி வீதத்தில் ரூபா 12 மில்லியன் வங்கிக் கடனைப் பெற்றது. இந்த ஆண்டின்போது கடன் மீள்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆண்டிற்கான வட்டி நிதிச் செலவுகளின் கீழ் கணக்கிற் கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கடனின் அரைப்பங்கு 2019/20 ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். தொழிற்சாலையின் கட்டட நிருமாணம் 2019 சனவரி 01 ஆந் திகதி ஆரம்பித்ததுடன் 2020 செப்ரெம்பர் 30 இல் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. நிருமாணம் தொடர்பில் இறுக்கப்பட்ட கிரயம் மூலதன புத்துருவாகும் வேலைகள் கணக்கின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(6) ஆதனம், பொறி மற்றும் உபகரணத் தேய்மானம் கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது. இவற்றின் பயன்தரும் ஆயுட்காலங்கள் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | : | 20 ஆண்டுகள் |
| பொறி மற்றும் எந்திரம் | : | 10 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | : | 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | : | 10 ஆண்டுகள் |

(7) வரிமதிப்பாண்டு 2018/19 க்கான கம்பனியின் வருமான வரிப் பரிப்பு ரூபா 2,950,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(8) 2019 மார்ச் 31 இல் ரூபா 2 மில்லியன் தருமதியாக இருந்த வாடிக்கையாளர் ஒருவர் காணாமற் போயிருந்தார். கம்பனியால் அவரிடமிருந்து இந்தத் தொகையினை அறவிட முடியாத நிலை காணப்படுவதுடன் இது அறவிட முடியாததாக மாறியிருக்கிறது. மேலும் 2019 மார்ச் 31 இல் நிலுவையிலிருந்த வியாபார வருமதிகள் மீதியில் 2 % பொது ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

(9) 2019 மார்ச் மாதத்திற்கான மின்கட்டணம் ரூபா 700,000/- கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(10) 2019 மே 02 ஆந் திகதி நடைபெற்ற கம்பனியின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் 2019 மார்ச் 31 இல் இருந்த ஒவ்வொரு சாதாரண பங்கிற்கும் ரூபா. 5/- வீதம் இறுதிப் பங்கிலாபம் செலுத்துவதற்குப் பணிப்பாளர் சபை தீர்மானித்தது.

(11) நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக பணிப்பாளர் சபையினால் 2019 யூன் 20 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

மேற்படி தகவல்களைக் கவனத்திற்கொண்டு,

***நீங்கள் செய்யவேண்டியவை:***

**மெடிற்ரோ PLC** தொடர்பில் பிரசுரிப்புத் தேவைகளுக்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று) (10 புள்ளிகள்)

(b) 2019 மார்ச் 31 இல் நிதிநிலைக் கூற்று (07 புள்ளிகள்)

(c) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று (04 புள்ளிகள்)

(d) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் அசைவினைக் காட்டும் கூற்று (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) 2019 மார்ச் 31 இல் **வ/ப கஜசக்தி (தனி) கம்பனி (GPL)** மற்றும் **வ/ப சக்தி (தனி) கம்பனி (SPL)** ஆகியவற்றின் நிதிநிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன:

**2019 மார்ச் 31 இல்** *(ரூபா '000)*

**நிதிநிலைக் கூற்று**

| | **GPL** | **SPL** |
|---|---|---|
| **சொத்துக்கள்:** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்:** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் | 52,000 | 23,500 |
| திரள் தேய்மானம் | (12,500) | (7,500) |
| முன்கொணரற் பெறுமதி | **39,500** | **16,000** |
| **SPL** இல் முதலீடு | 40,000 | - |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | |
| தொக்குகள் | 13,100 | 27,900 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 40,250 | 10,500 |
| காசும் காசுச் சமானங்களும் | 2,300 | 1,100 |
| | **55,650** | **39,500** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **135,150** | **55,500** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்:** | | |
| **உரிமையாண்மை:** | | |
| குறிப்பிடு மூலதனம் - சாதாரண பங்குகள் | 80,000 | 35,000 |
| கைக்கொள் இலாபம் | 13,300 | 8,150 |
| | **93,300** | **43,150** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள்:** | | |
| நீண்ட காலக் கடன்கள் | 16,200 | - |
| **நடைமுறைப் பரிப்புக்கள்:** | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 20,250 | 11,400 |
| குறுங்காலக் கடன்கள் | 5,400 | 950 |
| | **25,650** | **12,350** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **135,150** | **55,500** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) 2018 ஏப்ரல் 01 ஆந் திகதி **GPL** கம்பனியானது **SPL** கம்பனியின் சாதாரண பங்கு மூலதனத்தின் 80 % ஐ கொள்வனவு செய்தது.

(2) கொள்வனவுத் திகதியில் கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் சீர்மதிப்பு ரூபா 7.72 மில்லியன். கொள்வனவுத் திகதியில் **SPL** கம்பனியின் கைக்கொள் இலாபம் ரூபா 6 மில்லியனாகவும் **SPL** கம்பனியின் இனங்காணத்தகு நிகரச் சொத்துக்களின் சீர்மதிப்பு அதன் ஏட்டுப் பெறுமதி களுக்குச் சமமாகவும் இருந்தன.

(3) 2019 மார்ச் 31 ஆந் திகதியில் **SPL** கம்பனியின் இறுதித் தொக்கில் **GPL** கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்த ரூபா 4.5 மில்லியன் பெறுமதியான தொக்குகள் இருந்தன. **GPL** கம்பனி இந்தப் பொருட்களை கிரயத்தில் 20 % இலாப எல்லை வைத்து **SPL** கம்பனிக்கு விற்றிருந்தது. மேலும் **SPL** கம்பனியானது **GPL** கம்பனிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 2.5 மில்லியன் வியாபார சென்மதி மீதியொன்றைக் கொண்டிருக்கிறது.

(4) 2018 ஏப்ரல் 01 ஆந் திகதி **GPL** கம்பனி ஆண்டிற்கு 15 % வட்டிக்கு ரூபா 4 மில்லியனைக் குறுங்காலக் கடனாக **SPL** கம்பனியிடமிருந்து பெற்றிருந்தது. ஆண்டின்போது மூலதன மீள்கொடுப்பனவுகள் எதுவும் செலுத்தப்படாத அதே வேளை கடன் மீதான ஆண்டிற்கான வட்டியினை **GPL** கம்பனி செலுத்தியிருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) ஒன்றித்தலினால் ஏற்படும் நன்மதிப்பைக் **கணிக்குக.** (05 புள்ளிகள்)

(b) 2019 மார்ச் 31 இல் ஒன்றித்த நிதிநிலைக் கூற்றினைத் **தயாரிக்குக.** (14 புள்ளிகள்)

(B) **வக்கும்புர ஹோல்டிங்ஸ் PLC** ஆனது 2019 மார்ச் 31 மற்றும் 2018 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த நிதியாண்டுகளுக்கு கீழ்வரும் விகிதங்களைக் கணித்திருந்தது:

| | **2018/19** | **2017/18** |
|---|---|---|
| நடப்பு விகிதம் | 1.75 | 1.5 |
| தொழிற்படுத்திய மூலதனம் மீதான வருவாய் (ROCE) | 11 % | 13 % |
| தொக்கு இருப்புக் காலம் | 50 நாட்கள் | 38 நாட்கள் |

**நீங்கள் செய்யவேண்டியது:**

2017/18 உடன் ஒப்பிடுகையில் 2018/19 இல் மேலே கணிக்கப்பட்ட விகிதங்களில் உள்ள மாற்றங்கள் ஒவ்வொன்றிற்கும் சாத்தியமான இரண்டு (02) காரணங்கள் வீதம் **குறிப்பிடுக.**

(06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |